## பிணக் கூராய்வு அறிக்கையில் குளறுபடி; உடலைப் பெறச் சொல்லி மிரட்டும் காவல்துறை!

# சபரிவர்மன் குடும்பத்திற்கு முதல்வர் ஆறுதல் கூட சொல்லவில்லை! நிவாரணமும் இல்லை!

### குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறிய பின் – கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!



நாகர்கோவில், ஜூலை 17-

**த.வெ.க. அரசின் காவல்துறையால் அடித்துக் கொல்லப்பட்ட சபரிவர்மன் குடும்பத்தினரைச் சந்தித்த பிறகு, செய்தியாளர்களிடம் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் அளித்த பேட்டியில் "இதுவரை அமைச்சரோ, முதலமைச்சரோ ஒரு ஆறுதல் கூட சொல்லவில்லை, எந்த நிவாரணமும் அறிவிக்கவில்லை. பிணக் கூராய்வு அறிக்கையில் குளறுபடி, உடலைப் பெற சொல்லி மிரட்டும் காவல்துறை தவெக அரசு மீது நம்பிக்கை இல்லை என குறிப்பிட்டார்.**

இதுகுறித்து கனிமொழி கருணாநிதி அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :-

மிக சாதாரணமாக வாழ்ந்து கொண்டிருந்த ஒரு மாற்றுத்திறனாளி சகோதரர் சபரிவர்மன் அவர்கள் காவல் துறையால் என்ன காரணம் என்று யாருமே புரிந்து கொள்ள முடியாத வகையில் அழைத்துச் செல்லப்பட்டு, பிறகு காவல் நிலையத்தில் இருந்து வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். மறுபடியும் 'ரிமாண்ட் பண்ணிட்டாங்க' என்று சொல்லி அவரை கொண்டு சென்று சிறையில வைத்துள்ளனர். அவரின் குடும்பத்தினர் சென்று சந்தித்த போது அவர் உடல் நலத்தோடு அவர்களுடன் பேசி இருக்கிறார். இந்த சூழலில், திடீர் எனறு 'அவரை கொண்டு போய் ஹாஸ்பிட்டல்ல சேர்த்திருக்கோம்' காவல்துறையில் இருந்து ஒரு தகவல் அவங்களுக்கு தரப்படுகிறது.

**குடும்பத்தினர் போராட்டம்!**

அவர்கள் சென்று பார்க்கும் பொழுது அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என கூறி உள்ளனர். அந்த மருத்துவமனையில் அவர் கொண்டுவரப்பட்ட போதே இறந்துவிட்டிருந்தார் என்றுதான் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்ல 19 இடத்தில் அவர் தாக்கப்பட்டு, அவருடைய கை எலும்புகள் எல்லாம் முறிந்திருக்கக்கூடிய ஒரு நிலையில், குடும்பத்தினர் போராட்டம் நடத்திய பிறகுதான், அத்தனை அரசியல் கட்சிகளும் அவங்க குடும்பத்தாருடன் இணைந்து போராடிய பிறகுதான் இந்த அரசு பிரச்சனை மீது நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது.

**வாய் திறக்காத அரசு!**

இதுவரை இந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய அமைச்சரோ, அரசின் சார்பிலே யாருமே இந்த குடும்பத்தில இருக்கக்கூடியவர்களுக்கு ஒரு ஆறுதல் வார்த்தை கூட சொல்ல முன் வரவில்லை. அவங்ககிட்ட என்ன நடந்தது என்று வந்து கேட்க கூட இல்லை. இப்படிப்பட்ட ஒரு சூழல்ல அந்த குடும்பத்திற்கு 'அரசு மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை' என்று சொல்லக்கூடிய நிலையில் இந்த விசாரணையை சி.பி.ஐ.க்கு மாற்றனும். இந்த அரசு மேல எனக்கு நம்பிக்கை இல்லை'ன்னு அவங்க குடும்பத்தை சேர்ந்த அவருடைய சகோதரியும் அவங்களுடைய மனைவியும் திரும்ப திரும்ப சொல்கிறார்கள். அவங்களுக்கு எந்த நிவாரணமும் இதுவரைக்கும் அறிவிக்கப்படவில்லை. அவருடைய மனைவி படித்திருக்கிறார்கள், அவர்களுக்கு அரசு வேலை தருகிறார்களா.? இல்லையா என்பது பற்றி கூட அரசு வாய் திறந்து இதுவரைக்கும் பேசவில்லை.

அரசு சார்பில் ஒரு அமைச்சர், முதலமைச்சர் உட்பட யாருமே வாய் திறந்து அந்த குடும்பத்திற்கு ஒரு ஆறுதல் வார்த்தை கூட சொல்லவில்லை. இந்த சூழல்ல உண்மை என்ன என்பதை விசாரிக்க வேண்டும்.? எப்படி ஹாஸ்பிடல் கொண்டு வரப்பட்ட ஒருத்தருக்கு யாரையுமே கேட்காம போஸ்ட் மார்ட்டம் பண்றாங்க? அந்த குடும்பத்திற்கு தொடர்ந்து அச்சுறுத்தல்கள் இருக்கு. வந்து 'பாடி வாங்குறதுக்கு வந்து கையெழுத்து போடணும்'னு சொல்லி வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இறந்தவரின் உடல்நிலை சரியில்லாத தந்தைக்கு உடலை வாங்க அழுத்தம் தந்து கொண்டிருக்கிறார்கள். அந்த தெருவில இருப்பவர்கள் எல்லோருமே எங்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையில இருக்கிறோம் என்கிறார்கள். இன்னமும் அரசின் சார்பிலே எந்த அமைச்சரோ முதலமைச்சரோ அவங்களுக்கு ஒரு ஆறுதல் வார்த்தை கூட சொல்லவில்லை, அவர்களுக்கு எந்த நிவாரணத்தையும் அறிவிக்கவில்லை, அவர்களுக்கு ஒரு நியாயமும் கிடைக்கவில்லை.

**நடவடிக்கை எடுக்க தயக்கம் ஏன்?**

இதற்கு ஒரு அரசு முழு பொறுப்பேற்க வேண்டும். ஆனா தொடர்ந்து யாரு மேலாவது பழி போடுறதுக்குதான் அவங்க வந்து நிக்கிறாங்களே தவிர வேறு எதற்கும் பொறுப்பேற்க தயாராக இல்லை. இதுவரைக்கும் அவங்களுக்கு என்ன நிவாரணம் அப்படிங்கறத அவங்கள் எதுவும் தெரிவிக்கவில்லை. நடவடிக்கை எடுக்கறதுக்கு கூட இவ்வளவு தயக்கம் ஏன்? எல்லாமே மூடு மந்திரமாக இருக்கக்கூடிய சூழலா இருக்குன்னுதான் குடும்பமே வந்து அச்சப்படுது. இந்த வழக்கே பொய் வழக்கு என குடும்பத்தினர் கூறுகின்றனர்.

வேறு யாரையோ காப்பாற்றுவதற்காக தான் அவர் மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று உறுதியாக அவர்கள் நம்புகிறார்கள். 19 காயங்களால் அவர் உயிரிழக்கவில்லை என்பது போல அறிக்கை இருப்பதா சொல்றாங்க, 'அந்த காயத்தால உயிரிழப்பு இல்லை'ன்னு சொல்றாங்க அப்படி என்றால் உயிரிழப்பிற்கு காரணம் என்ன? மிக மோசமாக தாக்கப்பட்டிருக்கிறார், ஒரு கையில அவருக்கு வந்து மூன்று இடத்தில் வந்து எலும்பு முறிவு நடந்திருக்கு, தலை தாக்கப்பட்டிருக்கு, அடிபட்டிருக்கு, உடம்பு முழுவதும் அவருக்கு காயங்கள் இருக்கு. அப்படி இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில என்ன காரணத்தால் அவர் இறந்தார் என்பதை போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்ல தெளிவா சொல்லி இருக்கணும். ஆனா அதையும் சொல்லவில்லை.

ஆகவே இறந்தவரின் குடும்பம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கக் கூடிய விசாரணை மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை, இதை சிபிஐக்கு மாற்றணும் என்கிற கோரிக்கையை வைக்கத் தொடங்கி இருக்கிறார்கள். விசாரணை எதுவும் தெளிவில்லாமல் காவல்துறை சொல்லக்கூடிய தகவல்கள் உண்மைக்கு புறம்பான ஒன்றாகவே உள்ளது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

---

## தேர்தல் ஆதாயத்துக்காக அஜித்குமார் வீடு சென்ற விஜய்க்கு –

# சபரிவர்மன் வீடு இப்போது ஏன் தூரமாகத் தெரிகிறது?

### தி.மு.க. ஐ.டி. விங் கேள்வி!

சென்னை, ஜூலை 17–

தி.மு.க. ஐ.டி. விங்கின் வலைதளப் பதிவு வருமாறு :–

தேர்தலுக்கு முன்பு அஜித்குமார் வீட்டுக்குச் சென்ற விஜய்க்கு, இன்று சபரிவர்மன் வீடு ஏன் இவ்வளவு தூரமாகத் தெரிகிறது?

காவல்துறை சித்திரவதையால் உயிரிழந்த சபரிவர்மன் குடும்பத்தின் கதறல் கண்ணுக்குத் தெரியவில்லையா?

இல்லை, உங்கள் கட்டுப்பாட்டில் உள்ள காவல்துறையே உங்களுக்கு இன்னும் அனுமதி வழங்கவில்லையா?

அஜித்குமார் வீட்டிற்குச் சென்றது வெறும் தேர்தல் நாடகமா?

சபரிவர்மன் மரணத்திற்கு நீதி பெற்றுத் தருவதாக ஒரு வார்த்தை சொல்லக்கூட உங்களுக்குத் திராணியில்லையா?




---

## தினமும் ஊழல், தினமும் அராஜகம் – இதுவே இன்றைய தமிழகத்தின் நிலை!

# விஷவாயு நிரம்பிய ஊழல் சாக்கடை த.வெ.க.!

### தி.மு.க. இணையதளப் பிரிவு காட்டம்!

சென்னை,ஜூலை.16–

"யார் லஞ்சம் கேட்டாலும் என் பெயரைச் சொல்லுங்கள்" என்று மேடையில் உத்தமர் வேடமிட்டு நாடகமாடிய விஜய், இன்று தனது கட்சியின் ஊழல்களைக் கண்டு மௌனம் காப்பது அவரது போலித்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

- செங்கல் சூளைகளில், மணல் அள்ள என மிரட்டிப் பணம் பறிப்பது.
- டாஸ்மாக் கடைகளில் பாட்டிலுக்கு 30 ரூபாய் கமிஷன் வசூலிப்பது.
- விவசாயிகளின் நெல் மூட்டைகளை கொள்முதல் செய்ய மூட்டைக்கு 60 ரூபாய் லஞ்சம் வாங்குவது.
- நீதிமன்றங்களில் அரசு வழக்கறிஞர் நியமனத்திற்கு 20 முதல் 30 லட்சம் வரை Party Fund வாங்குவது!
- 100 கோடி ரூபாய் மதிப்புள்ள கோயில் நிலத்தை 2 கோடி ரூபாய்க்கு தனிநபருக்கு விற்பனை செய்வது.

இதற்கெல்லாம் CM Uncle என்ன விளக்கம் அளிக்கப் போகிறார் என கேட்டால் டேஷ் கொத்து பரோட்டா என கண்டதை வாந்தி எடுப்பார்.

மேடைகளில் தூய சக்தி என்று புளுகித் தள்ளும் தவெக, உண்மையில் விஷவாயு நிரம்பிய ஊழல் சாக்கடையாகச் சீரழிந்து கிடக்கிறது.

---

## டிப்ளோமேட் பாஸ்போர்ட் இல்லாமல் – சொந்த பாஸ்போர்ட்டில்

# வெளிநாடு சென்ற அமைச்சர்கள் கீர்த்தனா, ராஜ்மோகன்!

### மிகப்பெரிய விதிமீறல்! கொதித்தெழுந்த ஒன்றிய அரசு!

சென்னை, ஜூலை 17-

**தமிழக அரசுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது ஒன்றிய அரசு. தமிழ்நாடு அரசின் தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா மற்றும் பள்ளிக் கல்வித்துறை, தமிழ் வளர்ச்சி, செய்தித் துறை அமைச்சர் ராஜ்மோகன் ஆகிய இருவரும் சமீபத்தில் அரசு பயணமாக வெளிநாடு சென்று திரும்பியுள்ளனர்.**

**இதில் மிகப்பெரிய விதிமீறல் செய்யப்பட்டு உள்ளதாக புகார் வைக்கப்பட்டு உள்ளது.**

தமிழக அரசியல் வட்டாரத்தில் தற்போது ஹாட் டாப்பிக்காக மாறியிருப்பது, தமிழக அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணம் மற்றும் அதற்கு ஒன்றிய அரசு அனுப்பியுள்ள ஷோ காஸ் நோட்டீஸ் விவகாரம் தான்.

விதிமுறைகளை மீறி வெளிநாடு சென்று திரும்பிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளால், தமிழக அரசு இப்போது டெல்லிக்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. கோட்டை வட்டாரத்தையே உலுக்கிக்கொண்டிருக்கும் இந்த விவகாரத்தின் பின்னணி என்ன? விரிவாகப் பார்ப்போம்.

**சர்ச்சையை கிளப்பிய வெளிநாட்டுப் பயணம்!**

தமிழக அரசின் தொழில் துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா மற்றும் பள்ளி கல்வித்துறை, தமிழ் வளர்ச்சி, செய்தித் துறை அமைச்சர் ராஜ்மோகன் ஆகிய இருவரும் சமீபத்தில் அரசுப் பயணமாக வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியுள்ளனர். இவர்களுடன் துறை சார்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களின் தனி உதவியாளர்களும் பெரும் பட்டாளமாக உடன் சென்றுள்ளனர்.

அரசு முறைப் பயணம், முதலீடுகளை ஈர்ப்பதற்கான பயணம் எனப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், இந்த ஒட்டுமொத்தப் பயணமும் இப்போது ஒரு மிகப்பெரிய சட்ட சிக்கலில் வந்து முடிந்துள்ளது.

**விதிமீறல் என்ன? டெல்லி காட்டிய சிவப்புக்கொடி!**

பொதுவாக, ஒரு மாநிலத்தின் அமைச்சர்களோ அல்லது உயர் அதிகாரிகளோ அரசு முறைப் பயணமாக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, அதற்கு ஒன்றிய வெளியுறவுத் துறை மற்றும் உள்துறை அமைச்சகத்தின் முறையான அனுமதியைப் பெற வேண்டும் என்பது கட்டாய விதியாகும்.

மேலும், இத்தகைய பயணங்களின் போது அவர்கள் Diplomatic Passport மூலமாகவே பயணிக்க வேண்டும்.

ஆனால், இந்த விவகாரத்தில் அமைச்சர் கீர்த்தனா மற்றும் அமைச்சர் ராஜ்மோகன் ஆகிய இருவருமே ஒன்றிய அரசின் எவ்வித முன் அனுமதியும் பெறவில்லை எனக் கூறப்படுகிறது. அதுமட்டுமன்றி, டிப்ளமேடிக் பாஸ்போர்ட்டைப் பயன்படுத்தாமல், தங்களுடைய சொந்த பாஸ்போர்ட் மூலமாக வெளிநாடு சென்று வந்துள்ளனர்.

இது அப்பட்டமான விதிமுறை மீறல் என்றும், நாட்டின் விதிமுறைகளுக்கு எதிரானது என்றும் டெல்லி தரப்பு கொதித்தெழுந்துள்ளது.

**மத்திய உள்துறை அமைச்சகத்தின் 'ஷோ காஸ்' நோட்டீஸ்!**

இந்த விதிமீறலைக் கடுமையான குற்றச்சாட்டாகக் கையில் எடுத்துள்ள மத்திய உள்துறை அமைச்சகம், தற்போது தமிழக அரசுக்கு விளக்கம் கேட்டு அதிரடியாக 'ஷோ காஸ்' நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அந்த நோட்டீஸில், மத்திய அரசின் அனுமதி இல்லாமல் அமைச்சர்கள் எப்படி வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளலாம் என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. மேலும், இந்த விவகாரத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலக அதிகாரிகள் மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தங்களது கடமையைச் சரியாகச் செய்யவில்லை என்றும், அரசை முறையாக அவர்கள் வழிநடத்தத் தவறிவிட்டனர் என்றும் ஒன்றிய அரசு சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிகிறது.

**அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை?**

அமைச்சர்களுடன் சென்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மற்றும் உதவியாளர்களும் மத்திய அரசின் அனுமதியைப் பெறத் தவறியதால், அவர்கள் மீதும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அந்த நோட்டீஸில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக கோட்டை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியல்வாதிகளுக்கு விதிகள் தெரியாமல் போனாலும், நிர்வாகத்தை நடத்தும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாவது இதனைச் சுட்டிக் காட்டியிருக்க வேண்டாமா என்ற கேள்வி டெல்லியில் பலமாக எழுந்துள்ளது.

**மண்டையை உடைத்துக் கொள்ளும் அதிகாரிகள்!**

மத்திய உள்துறை அமைச்சகத்திடமிருந்து வந்துள்ள இந்த அதிரடி நோட்டீஸால் தமிழக அரசுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தலைமைச் செயலக உயர் அதிகாரிகள் தற்போது திகைத்துப் போயுள்ளனர்.

---



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 124–வது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (15.07.26) புதன் கிழமை காலை 10.00 மணியளவில் சென்னை, அண்ணா சாலை, பல்லவன் இல்லம் அருகில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி. கே. சேகர் பாபு எம்.எல்.ஏ மாலை அணிவித்து புகழாரம் சூட்டினார். நிகழ்ச்சியில் துறைமுகம் பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர், வட்ட செயலாளர் வே.பா.பிரபாகரன், ஜி ராமமூர்த்தி, மா. ஜெய்சங்கர், அபரஞ்சி, லண்டன் முருகன் மற்றும் கழக முன்னோடிகள் நிர்வாகிகள் செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் கொளத்தூர் கிழக்கு பகுதி 68 வட்டக் கழகச் செயலாளரும், மாநகர போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைவர் பி.டி.சி. எஸ்.ரவி (எ) சிவகுமாரின் புதல்வர் டாக்டர் எஸ்.சபரிவாசன் டாக்டர் வி.கார்த்திகா ராஜம் திருமண வரவேற்பு விழாவில் மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அரியலூர் மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். உடன் ஐ.சி.எப்.வ.முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார் எம்.சி, சுதா தீனதயாளன், வரலட்சுமி, எஸ்.பன்னீர்செல்வம், வட்டச் செயலாளர்கள் ஊமைதுரை, சந்திரசேகர், முருகன், தமிழ்செல்வன், ராஜன், க.செல்வம் மற்றும் மாநகர போக்குவரத்து ஊழியர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள், தொழிலாளர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.